தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 24, ஸ்ரீமுக - திருவள்ளுவர் ஆண்டு 2025

1994 ஏப்ரல் 7, வியாழக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை **10.00** மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டின் தலை"

பகைவர்களால் கெடுக்க முடியாததாயும், ஒரு வேளை கேடு சூழ்ந்தாலும் அதன் காரணமாக தன் வளம் குன்றாததாயும் உள்ள நாடே, நாடுகள் எல்லாவற்றிலும் தலைசிறந்த நாடாகக் கருதப்படும்.

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

1. கவன ஈர்ப்பு

(அ) அரவக்குறிச்சி தொகுதி குடகனாற்றில் தண்ணீர் திறந்து விடாததால் பாசனம் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திருமதி கே. மரியம் உல் ஆசியா அவர்கள் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

2. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்த அறிவிக்கை குறித்து.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஸ் வழிமறிப்பு, கொள்ளை பற்றி இன்றே எடுத்துக் கொள்ளவேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் நாளைக்கு எடுக்கிறேன். (குறுக்கீடு) உங்கள் பிரச்சினை நாளை எடுக்கப்படும். இன்றைக்கு நேரடியாக நேற்றைய பதிலுரைக்காக "வினாக்கள்-விடைகள்" நேரம் கூட ஒதுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) திருமதி கே. மரியம் உல் ஆசியா அவர்கள் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார். (குறுக்கீடு) திரு. குமாரதாஸ் உட்காருங்கள். நாளைக்கு எடுக்கிறேன். இன்றைக்கு எடுக்க வழியில்லை. (குறுக்கீடு)

1. கவனஈர்ப்பு-- தொடர்ச்சி

(அ) அரவக்குறிச்சி தொகுதி குடகனாற்றில் தண்ணீர் திறந்து விடாததால் பாசனம் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து-தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி கே. மரியம் உல் ஆசியா

*** திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " அரவக்குறிச்சி தொகுதியில் குடகனாற்றில் தண்ணீர் திறந்து விடாததால் குடகனாற்றுப் பாசனப் பகுதிகளில் பயிர்களும், தென்னை மரங்களும் நீரின்றி வர்டுவது குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...... (குறுக்கீடு)

டாக்டர் தே. குமாரதாஸ்: ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முறை தவறி நடந்ததால் குமாரதாஸ் அவையை விட்டு வெளியேறவும். (குறுக்கீடு) குமாரதாஸை அவையை விட்டு அப்புறப்படுத்தவும். (குறுக்கீடு) முறை தவறி நடப்பதை அனுமதிக்க முடியாது. மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும்.

(டாக்டர் தே. குமாரதாஸ் அவையை விட்டு வெளியேறினார்)

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1994 ஏப்ரல் 7] [திரு. எஸ். கண்ணப்பன்]

அறிக்கை

குடகனாறு மறுகட்டுமான நீர்த்தேக்கப் பணிகளின் பெரும் பகுதி முடிந்துள்ளது. இந்த நீர்த்தேக்கத்தின் மொத்தம் பதிவுபெற்ற ஆயக்கட்டு 9000 ஏக்கர். தவிர, 819 ஏக்கர் உறுதி செய்யப்பட்ட ஆயக்கட்டாகும். இடைவெளி ஆயக்கட்டு 356 ஏக்கர். தற்போதைய நீரளவு 250 மில்லியன் கன அடி. நடப்பு ஆண்டில் வரப்பெற்ற நீர் வரத்து, சோதனை அடிப்படையில் தேக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தேக்கப்பட்ட நீர் இரண்டு கால்வாய்களிலும் பாசனத்திற்கு திறந்துவிடப்பட்டுள்ளது. இதன்மூலம் திண்டுக்கல் மாவட்டத்தில் 1092 ஏக்கரும், திருச்சி மாவட்டத்தில் 3109 ஏக்கரும், ஆகமொத்தம் 4201 ஏக்கர் பரப்பு தற்போது நேரடிப் பாசனப்பயன் பெறுகின்றது. நீர்த்தேக்கத்தில் தற்போது இருப்பில் இருக்கும் நீரைக் கொண்டு மேலே கூறியுள்ளவாறு 4201 ஏக்கர் பரப்புக்கு மட்டுமே பாசனத்திற்கு தண்ணீர் அளிக்க இயலும். அவ்வாறே தற்போது தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆற்றுப்பகுதி முழுவதும் தற்போது மிகவும் வறண்ட நிலையில் இருப்பதாலும், நீர்த்தேக்கத்திலிருந்து மிகக் குறைந்த அளவு நீரை ஆற்றில் திறந்துவிட்டாலும், வழியில் ஆற்றுப்படுகையில் உறிஞ்சப்பட்டு விடும். ஆகவே, தண்ணீர் கீழ்ப்பகுதியை சென்றடையாது. தற்போது அணையில் தேக்கப்பட்டுள்ள நீர் ஏற்கெனவே பாசனத்திற்கு திறந்துவிடப்பட்ட 4200 ஏக்கருக்கு மட்டுமே போதுமானதாக உள்ளதால் மேற்கொண்டு கூடுதல் பரப்பளவுக்கு பாசனம் அளிக்க இயலாது.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடகனாற்று நீர்த் தேக்கத்திலிருந்து இரண்டு கால்வாய்களில் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படுவதாக விவர அறிக்கையில் தரப்பட்டுள்ளது. திருச்சி மாவட்டம் அரவக்குறிச்சி தொகுதியில் குடகனாறு ஆற்றுப் பாசனம் பெறும் நாகம்பள்ளி, கொடையூர், வெங்சமாங்குழலூர் மேல் பாகம், புக்கம்பாடி கீழ் பாகம், எருமார்பட்டி, அஞ்சுகவுண்டன்பட்டி, அம்மாபட்டி, ஈசநத்தம், பெரியமஞ்சுவழி ஆகிய கிராமங்களில் சுமார் 800 ஏக்கரில் கடலை, மிளகாய், சோளம் மற்றும் தென்னை மரங்கள் நீரின்றி வாடுகின்றன. மேலும் பொது மக்களும், கால்நடைகளும் குடிநீர் இன்றித் தவிக்கிறார்கள். எனவே குடகனாற்றில் அழகாபுரி அணை கட்டுவதற்கு முன்பிலிருந்து தொன்றுதொட்டு பன்னெடுங்காலமாக குடகனாற்றுக் கடைமடைப் பகுதியான அரவக்குறிச்சி தொகுதி தொடர்ந்து பாசன வசதி பெற்று வந்தது. அழகாபுரி அணை கட்டப்பட்டதற்குப் பிறகு கடை மடைப் பாசனப் பகுதிகளுக்குப் போதுமான அளவு தண்ணீர் திறந்துவிடப்படாத குறையை

நீக்க விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையிலான அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடகனாறு நீர்த்தேக்கத்தைப் பொறுத்தமட்டில் திருச்சி மாவட்டத்தில் 3109 ஏக்கர்களும், திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்திலே 1092 ஏக்கர்களும் பாசனப் பரப்பாக நிர்ணயித்திருக்கிறோம். இப்போது 250 மில்லியன் கன அடி தண்ணீர் தான் இருக்கிறது. 50 நாட்களுக்குத்தான் அந்தத் தண்ணீரை வழங்க இயலும். எனவே கடை மடைப் பகுதிகளுக்கு ஏற்கெனவே இருக்கின்ற பாசனப் பகுதிகளுக்குத்தான் இன்றைக்குத் தண்ணீரை வழங்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலேதான் அதற்கு அப்பாற்பட்ட பகுதிகளுக்குத் தற்போதுள்ள சூழ்நிலையில் வழங்க இயலாமல் இருக்கிறது. மேலும் பொதுவாக இப்போது வறண்டு கிடக்கின்ற அந்த ஆற்றிலிருந்து தண்ணீரைத் திறந்துவிட்டால், தண்ணீரை உறிஞ்சி விடும். ஆகவே இருக்கின்ற தண்ணீரே போதாமல் போய்விடும். இந்தச் சூழ்நிலையில் இருக்கின்ற பாசனப் பரப்பை பாதுகாப்பதற்குத்தான் தண்ணீரை விடமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே பார்த்தேன், குடகனாறு வறண்டு கிடக்கின்றது என்று. அந்த ஆற்றங்கரைப் பகுதியில் வாழும் மக்கள் குடிநீரின்றி மிகவும் தவிக்கிறார்கள். மேலும் அங்கு வறட்சிக் காலத்தில் ஆழ் குழாய்க் கிணறு போட்டாலும் அது தண்ணீரின்றி தோல்வியில் முடிந்து விடுகின்றது. அதனால் அங்குள்ள கால்நடைகளும் மக்களும் குடிநீருக்கு மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். எனவே அந்தப் பகுதியிலுள்ள மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவும்—மேலும் அங்கு ஏற்கெனவே பயிர்கள் பயிரிடப்பட்டிருக்கின்றன—அந்தப் பயிர்களைக் காப்பாற்றவும் அரசு மீண்டும் பரிசீலனை செய்து, முறை வைத்தாவது தண்ணீர் விடுவதற்கு அரசு ஆவனசெய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததைப் போல பாசனப் பரப்பு என்று ஆயக்கட்டு நிர்ணயித்து விட்டால், அந்த ஆயக்கட்டுகளுக்கு மாத்திரம்தான் தண்ணீர் விட முடியும். அதற்கு மேலே அதிகமான தண்ணீர் இருக்கிறபோது தான் மற்ற பகுதிகளுக்கு நாம் பொதுவாக

1994 ஏப்ரல் 7] [திரு. எஸ். கண்ணப்பன்]

கண்சிடர் பண்ணுவது வழக்கமாக உள்ளது. ஏற்கெனவே இருக்கிற பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் இல்லாமல் புதிதாகக் கொடுத்தால், அதிலே பிரச்சினைகள் உருவாகும். ஆகவேதான் நான் ஏற்கெனவே அது பற்றி தெரிவித்து இருக்கிறேன். அந்தப் பகுதியிலே குடகனாற்றில் இருக்கிற தண்ணீரும் போதுமான அளவு இல்லை என்பதையும் சொல்லியிருக்கிறேன். ஆனால் அந்தப் பகுதி வறட்சிப் பகுதி என்பதற்காக பாசனப் பகுதி தண்ணீரை இதிலே திறந்து விடுவதற்கு வாய்ப்பு இருக்காது. ஏனென்றால் மற்றவர்கள் ஆட்சேபிப்பார்கள். ஆகவே இருக்கிற சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அதிகாரிகளிடத்திலே அந்த சுற்றுப்புறத்திலே இருக்கிற குடிநீர்ப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏதாவது இதன் மூலம் செய்யலாமா என்று ஒரு விவர அறிக்கையைப் பெற்று அதற்குப் பின்னாலே இந்த அரசு ஏதாவது நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளில் இறங்கும் என்பதை மாத்திரம் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) புதுக்கோட்டை மாவட்ட மில்களில் கடலை, அரிசி, எடைபோடுவதற்கு 'ஸ்கேல்' முறை அமுல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சி. சுவாமிநாதன், திரு. எஸ். சண்முகநாதன் மற்றும் திரு சி. குழந்தைவேலு ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. சி. சுவாமிநாதன்.

திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டத்தில் அனைத்து மில்களிலும் கடலை, அரிசி எடை போடுவதற்கு 'ஸ்கேல்' முறையை அமுல்படுத்துவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் 63 ஆயில் மில்களும், 22 அரிசி மில்களும் ஆக மொத்தம் 85 மில்கள் உள்ளன. இதில் 42 மில்களில் விட்டத் தராசு பயன்படுத்தப்படுகிறது. 43 மில்களில் மேடைத் தராசு